# குறிஞ்சிப்பாட்டு உணர்த்தும் இசை மரபுகள்

*முனைவர் தோ. இராஜம்*
உதவிப்பேராசிரியர், தமிழ்த்துறை
அரசு கலை மற்றும் அறிவியல் கல்லூரி, நாகர்கோயில்

*செ. ஷீலா*
முனைவர் பட்ட ஆய்வாளர், தமிழியல்துறை
அண்ணாமலைப் பல்கலைக்கழகம், அண்ணாமலைநகர்

https://doi.org/10.5281/zenodo.15526472

**அறிமுகம்**

*இசைத்தமிழ் வரலாற்றை நோக்கும் பொழுது தொல்காப்பியர் காலத்திற்கு பல ஆண்டுகளுக்கு முன்பே இசைத்தமிழ் சீரும், சிறப்பாகவும் விளங்கியதற்கான ஆதாரங்கள் தொல்காப்பியத்தில் காணப்பெறுகின்றன. (முந்து நூல் கண்டு முறைப்பட எண்ணிப் புலம் தொகுத்தோனேசு – தொல். சிறப்புப் பாயிரம்) இசைத்தமிழ் குறித்துத் தொல்காப்பியம் தரும் இலக்கண குறிப்புகள் பற்றிய பரவலான இசையியல் செய்திகளையும் தமிழரின் இசை வாழ்வையும் சங்க இலக்கியங்களிலும், சிலப்பதிகாரம் முதலான காப்பியங்களிலும் பரவலாக காண இயலும். குறிப்பாகப் பத்துப்பாட்டு எட்டுத்தொகை நூல்களில் காணப்படும் இசையியல் தொடர்பான கருத்துக்களை இன்றைய நிலையில் ஆய்வு செய்யும் போது ஏறத்தாழ ஈறாயிரமாண்டுகளுக்கும் அதிகமான தொன்மை வாய்ந்த, வளம் பொருந்திய இசை மரபுகள் தமிழிசையாக உரபெற்று இன்று வரை உயிருடன் இருப்பதை உணரமுடிகிறது. காலமாற்றங்களினால் சில மாறுதல்கள் ஏற்பட்டாலும் மரபு வழியில் தனிசிறப்புகளில் காணப்படுகின்றன. இன்று வழக்கிலிருந்து வரும் கருநாடக இசை, இந்துஸ்தானி இசை, இவற்றிற்கு ஆதியாகவும், அடித்தளமாகவம் விளங்குவதற்கு தமிழிசையே ஐயமில்லை என்பதற்கு இசையறிஞர்கள் உறுதிபடுத்துகின்றனர் என்பதை ஆய்வதே இக்கட்டுரையின் நோக்கமாகும்.*

**கபிலரின் இசையுணர்வு**

*கபிலர் பாடிய நூல் குறிஞ்சிப்பாட்டு. இந்நூல் 261 அடிகளை உடையது. ஆசிரியப்பாவினால் ஆனது. இந்நூல் ஆரிய அரசன் பிரகத்தனுக்குத் தமிழ் அறிவுறுத்தப் பாடப்பட்டதாகும். சங்கப் புலவர்களில் குறிஞ்சித்திணையை பாடுவதில் புலமை பெற்றவர் இவர்.*

*பத்துப்பாட்டு, எட்டுத்தொகை, பதிணென் கீழ்க்கணக்கு இவற்றள் இவருடைய பாடல்கள் பரவிக்காண இவரின் புலமைக்கு சான்று பகருகின்றன.*

> **“உலகுடன் ரிரிதரும் பலர்புகழ் நல்லிசை**
> **வாய்மொழிக் கபிலன்”** **(அகம். 78)**

என்று நக்கீரர் கபிலரைப் புகழ்ந்து பாடுகிறார்.

> **“செறுத்த செய்யுட் செய்செந் நாவின்**
> **வெறுத்த கேள்வி விளங்கு புகழ் கபிலன்”**

*என்று இளங்கீரனாரும்,*

> ***“பரந்திசை நிற்கப் பாடினன்”*** ***(புறம். 126)***
> ***“பொய்யா நாவிற் கபிலன்”*** ***(புறம். 174)***

*என்றும் மாறோக்கத்து நப்பசலையாரும்,*

***"நனவில் பாடிய நல்இசைக்***
***கபிலன் பெற்ற ஊரினும் பலவே"***

***(பதிற்றுப்பத்து. 85)***

*என்று பெருங்கன்றூர் கிழாரும் புகழ்ந்தனர்.*

*பெரும்புலவர்களின் புகழுரைகளால் கபிலருடைய பெரும்புகழும், வாய்மையும், பாடும் திறமையும், மிகுந்த கல்வி கேள்வியும், அகத் தூய்மையும் தெளிவாக விளங்குகின்றன.*

**இயற்கை பாட்டு**

***"ஆடுஅமைக் குயின்ற அவிர்துளை மருங்கின்***
***கோடை அவ்வளி குழலிசை ஆக***
***பாடுஇன் அருவிப் பனிநீர் இன்இசை***
***தோடுஅமை முழவின் துதைகுரல் ஆக,***
***கணக்கலை இகுக்கும் கடுங்குரற் தூம்பொடு***
***மலைப்புஞ் சாரல் வண்டு யாழ், ஆக,***
***இன்பல் இமிழ்இசை கேட்டு, கலிசிறந்து,***
***மந்தி நல்அவை மருள்வன நோக்க***
***கழைவளர் அடுக்கத்து, இயலிஆ டும்மயில்***
***நனவுப்புகு விறலியின் தோன்றும் நாடன்"***

***(அகம். 82)***

*கூத்தாட்டு அவைக்களம் போன்ற இயற்கைக் காட்சிகளைத் தரும் மலையில், மூங்கிலின் துளையில் புகுந்து எழும், காற்றால் வரும் ஓசை புல்லாங்குழல் ஓசையைப்போல் ஒலித்தது. பக்கமலையிலிருந்து வரும் அருவியிலிருந்து கொட்டும் நீரின் ஓசை முழவு ஓசையாய் இருந்தது.*

*துள்ளித் திரிந்து விளையாடும் மான்கள் எழுப்பும் ஒலி பெருவங்கியத்தின் ஓரசையாக கேட்டது. புக்களில் உள்ள மதுவை உண்ட வண்டுகளின் ஓசை யாழிசையாக கேட்டது. பல இசைகளை அறிந்த குரங்குகள் பார்வையாளராக வியப்புடன் நோக்கும்போது காட்டில் மயில்கள் விறலியர் போன்று காட்சியளிக்கின்றவாம். இவ்வாறு புலவர்கள் இயற்கையோடு ஒன்றி அவற்றை உணர்ந்து படைப்புகள் பல படைத்துள்ளனராம்.*

**இசையோடு உணர்ந்த வாழ்க்கை**

*குறிஞ்சி நில மக்களின் வாழ்க்கையில் "கிளி கடிதல்" ஒரு கருவியாகும். "கிளி கடிதல்" என்பது திணை புனத்தில் கதிர்களை உண்ண வரும் கிளிகளை காவல் செய்யும் பெண்கள் கருவிளை இயக்கி விரட்டுதலைக் குறிக்கும். கிளிகளை தழல், தட்டை போன்ற கருவிகளைக் கொண்டு, தலைவியானவள் பரண் (இதணம்) ஏறி நின்று விரட்டுவது காணப்படுகிறது. இவற்றைப் பற்றி குறிஞ்சி பாடல்கள்,*

***"கலிகெழு மரமிசைச் சேணோனிழைத்த***
***புலிஅஞ்சு இதணம் ஏறி அவண,***
***சாரல் சூரல் தகைபெற வலந்த,***
***தழலும் தட்டையம் குளிறும் பிறவும்***
***கிளிகடி மரபின ஊழ்ஊழ் வாங்கி"***

***(குறிஞ்சி. 40-44)***

***"சிறுதினைப் படுகிளி கடீஇயர் பன்மாண்"***

***(அகம். 32:5)***

***"சிறுகிளி கடிதல் பிறக்கியா வனதோ***
***குளிர்படு கையள்"***

***(நற்றிணை, 406:2-3)***

***"கலித்த வேனற், படுகிளி கடியங்***
***கொடிச்சிகைக் குளிரே"***

***(குறுந். 291:1-2)***

***"ஐவனச் சிறுகிளி கடியு நாட" (ஐங்.285:3)***

*இவ்வாறு சங்க நூல்களில் காணப்படுகின்றன.*

**இசைக் கருவிகள்**

***"திருமழை தலைஇய இருள்நிற விசும்பின்***
***விண்ணதிர் இமிழ்இசை கடுப்பப் பண் அமைத்துத்***
***திண்வார் விசித்த முழவொடு ஆகுளி***
***நுண்ணுருக்கு உற்ற விளங்கு அடர்ப்பாண்டில்***
***மின்னிரும் பீலி அணித்தழைக் கோட்டொடு***
***கண்ணிடை விடுத்த களிற்றுயிர்த் தூம்பின்***
***இளிப்பயிர் இமிரும் குறும்பரந் தூம்பொடு,***
***விளிப்பது கவரும் தீம்குரல் தட்டை,***
***கடிகவர்ப்பு ஒலிக்கும் வல்வாய் எல்லரி***
***நொடிதரு பாணிய பதலையும் பிறவும்"***

***(மலைபடுகடாம்)***

*மழை செல்வத்தை தரும் இருண்ட மேகங்கள் சூழ்ந்துள்ள விண்ணில், அதிரும்படி முழங்கும் மேகங்களின் ஓசையை போல ஒலிக்கும் பண்ணினை அமைத்து, வலிமையான வாரால் அமைத்த மத்தளமும், வெண்கலத்தாலான தாளமும், மயிற்பீலியால் கட்டப்பெற்ற கொம்பும் (ஊது), யானையின் பெருமூச்சுப் போன்ற ஒலிக்கின்ற தூம்பு என்ற இசைக்கருவியும், இளி என்னும் நரம்பு போல ஒலிக்கின்ற குறுகிய தூம்பும், கரடிகையும் சல்லியும், மாக்கிணையும், பேரிகை, படகம், இடக்கை, உடுக்கை, குடமுழா, தக்கை, தமருகம், தண்ணுமை பொன்ற பலவகை கருவிகளை கையாண்டுள்ளனர்.*

**முரசு**

***"அகலிரு வானத்து வீசுவளி கலாவலின்***
***மரசதிர்ந்து தன்ன வின்குர லேற்றொடு"***

***(குறிஞ்சிப்பாட்டு. 48-49)***

*முரசின் ஒலியை மேகத்தின் இடி முழக்கத்திற்கு ஒப்புமைப்படுத்தப்பட்டுள்ளது. இம்முரசு போர்க்களத்திற்குரியது. "கடுங்குரல் முரசு" எனப்பட்டது. மற்றொரு முரசு,*

***"இன்னிசை முரசிற் சுடர்ப்புட் சேட்"***

***(குறிஞ்சிப்பாட்டு. 51)***

*இவ்வகை முரசு இனிய ஓசையடையது.*

***"இன்னிலை முரசினியங்கி"***

***(நற்றிணை, 197:10)***

***"தண்ணென் முரசின் இமிழிசை காட்டும்"***

***(குறுந். 365:3)***

***"இன்னிசை இமிழ்முர சியம்பக்"***

***(பதிற்றுப்பத்து. 40:3)***

***"இடி முரசியம்ப" (பரி. 4:19)***

***"முரசதிர் பவைபோன் முழங்கிடி பயிற்று"***

***(பரி. 22:4)***

***"அடியுமிழ் முரசம்" (அகம். 354:2)***

***"உருமிடி முரசம்"***

***(திருமுருகாற்றுப்படை. 121)***

***"இன்னிசைய முரசமுழங்க" (மதுரைக். 80)***

*இம்முரசு பற்றிய குறிப்புகள் விரவிக் காணப்படுகின்றன.*

**இன்னியம்**

*இசைக் கருவிகளை குழுமி இனிமையாக இசைக்கப்படுதல் இன்னியம்.*

***"அரிக்கூட் டின்னியம் கறங்க ஆடுமகள்***
***கயிறூர் பாணியின் தளரும் சாயல்"***

***(குறிஞ்சி. 193-194)***

*கயிற்றில் நின்று பெண் ஒருவள் தன்னைச் சமனப்படுத்தி ஆடுகின்றாள். அந்த தருணத்தில் பல வகை இசைக்கருவிகள் பாணினிக்கு ஏற்றவாறு கூட்டிசை சிறக்க ஒலிக்கப்படுகின்றன. "பாணீ" என்ற சொல் தாளத்தைக் குறிக்கும்.*

**யாழ்**

*பண்டைய இசைக்கருவிகளில் மிகச் சிறந்த ஒன்று. யாழ் என்பது நரம்புகளாள் ஆக்கப்பட்டது அல்லது கட்டப்பட்டது என்று பொருள். கபிலர் தம் பாடலில் வண்டின் ஒலியை இசையோடு ஒப்பிடுவதை போன்றே குறிஞ்சிப்பாட்டிலும், யாழ் ஓசையைப் போல வண்டுகள் ஒலித்தன என்று பாடுகிறார்.*

***"காழகி லம்புகை கொளீஇ யாழிசை***
***யணிமிகு வரிமிஞி றார்ப்ப"***

***(குறிஞ்சி. 110-111)***

*மிஞறு என்னும் ஆண்வண்டின் ஒலி,*

***"கைகவர் நரம்பி னிம்மென விமிரு***
***மாதர் வண்டொடு சுரும்பு நயந்திருந்த்"***

***(குறிஞ். 147, 148)***

*பெண் வண்டின் ஒலி, இரண்டு ஒலிகளையும் யாழ் நரம்பின் இசையோடு ஒப்பிட்டுள்ளார் கபிலர். சிலப்பதிகாரத்திலும் நச்சினார்க்கினியர் உரையில் மேற்கோள்களாக,*

***"அரவ வண்டின் மார்த்துட னியாழ் செயும்"***

***(சிலம்பு. வேட்டுவ. 4,3,4)***

***"இனவண் டியாழ் செய" (சிலம். கால். 112)***

***"பயிலளந் தாமரைப் பல்வண்டியாழ் செய"***

***(சிலம்பு. நீர். 194)***

*இவ்வாறு காட்டியுள்ளார்.*

**முழவு**

*"மிருதங்கம்" என்னும் தாள இசைக் கருவியுடன் பெரிதும் சுட்டப்படுவது. தமிழர் இசைக்கருவிகளில் ஒன்று. இது குறுங்கம்பு கொண்டும் கைவிரலைக் கொண்டும் அடித்துத் தாளவிசை எழுப்பிச் சுவைக்கும் கருவியாகும். இது தோற்கருவி.*

*இசை, நாட்டியம் போன்ற நிக்ச்சி அல்லாமல் மற்ற நாட்களிலும் முழவு முழக்கப்பட்டதை குறிஞ்சிப்பாடல் விளக்குகிறது.*

***"துஞ்சா முழவின் மூதூர் வாயில்"***

***(குறிஞ்சி. 236)***

*முழவு இவ்வாறு ஒலிக்கப்பட்டதை பிற இலக்கியங்களிலும் காணலாம்.*

**தொகுப்புரை**

*பத்துப்பாட்டில் உள்ள பிற நூல்களிலும் எட்டுத்தொகை போன்ற நூல்களோடு குறிஞ்சிப் பாட்டை ஒப்பிடும்போது, இசை குறித்த செய்திகள் மிகக் குறைந்தே காணப்பட்டாலும், சங்க கால மாந்தர்களின் வாழ்வியல் சிந்தனைகளை ஆய்வதற்கு சற்று இவை மிகவும் துணைபுரிகின்றன. கபிலரின் குறிஞ்சிப் பாட்டின் வாயிலாக, சங்ககாலத் தமிழரின் இசைப்பாட்டு குறித்தும், ஆசிரியரின் உணர்வு, இசைக்கருவிகள், தொண்மைகால வரலாறு, கலை, பண்பாடு போன்றவற்றையும், இயற்கையின் எழில்மிகு நலனை நாம் கண்டுகளிக்க முடிகின்றது. இயற்கையை நேசிப்போம், இசையோடு மகிழ்வோம்.*

**துணைநூற்பட்டியல்**

1. சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம், நற்றிணை.
2. சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம், குறுந்தொகை,
3. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கிய எட்டத்தொகை அகநானூறு.
4. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் பத்துப்பாட்டு மூலமும் தெளிவுரையும். பொருண்மை நோக்கில் தமிழ் இலக்கிய வரலாறு.
5. மு. அருணாசலம், தமிழ் இலக்கிய வரலாறு.
6. பத்துப்பாட்டு மூலமும் உரையும், உ.வே.சா. பதிப்பு.
7. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கியம் எட்டுத்தொகை பதிற்றுப்பத்து.
8. மு. வரதராசன், தமிழ் இலக்கிய வரலாறு.
9. சங்க இலக்கிய உரை வேறுபாட்டுக் களஞ்சியம், குறிஞ்சிப்பாட்டு.
10. சிலப்பதிகாரம் மூலமும் அரும்பதவுரையும், அடியார்க்கு நல்லாருரையும், ச.வே.சா. பதிப்பு.
11. ஏ.என். பெருமாள், தமிழர் இசை, உலகத் தமிழாராய்ச்சி நிறுவனம், சென்னை, 1984.
12. அறிஞர் ச.வே. சுப்பிரமணியன், சங்க இலக்கிய எட்டுத்தொகை பரிபாடல் தெளிவுரை.
13. சி. பாலசுப்பிரமணியன், தமிழ் இலக்கிய வரலாறு.
14. கு.வெ. பாலசுப்பிரமணியன், சங்க இலக்கியம் ஓர் அறிமுகம்.